IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 75/2017

Deposition of Witness : DW 1

Name : பார்வதி (வயது – 54)

Father's Name /W/o : க/பெ பூபாலன்

Religion : இந்து

Calling : –

Address : திருமால்பூர்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 05.03.2026.

## குறுக்கு விசாரணை

1. எனக்கு திருமணம் நடந்த பிறகு நெல்வாய் கிராமத்திற்கு எப்போது வந்தேன் என்றால் 1987 ஆண்டு வந்தேன். 1987 ஆம் ஆண்டிற்கு முன்பு தாவா சொத்து சம்பந்தமான விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் படித்து தெரிந்துகொண்டேனா சரிதானா என்றால் சரிதான். தாவா சொத்து பொன்னப்ப ரெட்டியாருக்கு பூர்வீக சொத்து என்று தெரிவித்துள்ளேன் என்றாலும் அதற்கான ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொன்னப்ப ரெட்டிக்கு இரண்டு பிள்ளைகள் அர்ஜுன ரெட்டி மற்றும் நடேசன் என்றால் சரிதான். அர்ஜுன ரெட்டியின் பிள்ளை தான் பூபாலன் என்றால் சரிதான். பூபாலன் தான் இவ்வழக்கின் 1 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். பூபாலன் இறந்த பிறகு தான் எங்களை வாரிசாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். நடேச ரெட்டியின் பிள்ளை தான் முனியப்ப ரெட்டி என்றால் சரிதான். முனியப்ப ரெட்டியின் மகன் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2. தாவா சொத்தின் மொத்த அளவு கிழக்கு மேற்கு 18 3/4 அடி என்றால் இல்லை 20 அடி. வடக்கு தெற்கு மொத்த அடி எவ்வளவு என்றால் 181 அடி. என் பிரமாண வாக்குமூலத்தில் 18 3/4 அடி தவறு என்றும் 20 அடி தான் சரி என்று தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 1952 ஆம் ஆண்டு நடேசன் கிரையம் வாங்கிய சொத்து இந்நீதிமன்றத்தில் தாகக்ல் செய்துள்ளார் என்றால் தெரியாது. இவ்வழக்கு வாக்குமூலம் தாக்கல் செய்த பிறகும் நான் மேற்படி ஆவணத்தை எடுத்து பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 1952 ஆம் ஆண்டு ஆவணம் பார்க்காமல் சொல்ல முடியாது என்றால சரிதான். மேற்படி பத்திரம் இருந்தால் அவர்களுக்கு தான் உரிமையாகுமா என்றால் ஆம். **(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**